# 6

# குடும்பச் சார்பு உடன்படிக்கைகள்

TML 006

ஒன்ராறியோவில் பெண்களுக்குரிய குடும்பச் சட்டம்



## எல்லோரும் பெண்கள்.
## ஒரே குடும்பச் சட்டம்.

அறியுங்கள் உங்கள் உரிமைகளை.

flew Family Law Education for Women
Women's Right to Know

fodf Femmes ontariennes et droit de la famille
Le droit de savoir

# குடும்பச் சார்பு உடன்படிக்கைகள்

*இந்த சிறுநூல் சட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களில் அடிப்படையான ஒரு விளக்கத்தை உங்களுக்குத் தரும் நோக்கத்துடன் வரையப்பட்டு உள்ளது. தனிப்பட்ட முறையிலான சட்ட ஆலோசனை மற்றும் உதவி என்பவற்றுக்கு இணையான ஒரு மாற்றீடாக இதனைக் கருத முடியாது. குடும்பச் சட்டம் தொடர்பிலான பிரச்சினைகளை நீங்கள் எதிர்கொள்ளும் பொழுது உங்கள் உரிமைகளைக் காப்பதற்காக, உங்களால் முடிந்த அளவு விரைவாக சட்ட ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுங்கள். குடும்பச் சட்ட சட்டத்தரணி ஒருவரைக் கண்டுபிடித்து அவருக்குக் கட்டணமாக பணம் செலுத்துவது எப்படி என்பது பற்றி மேலதிக தகவல் பெறுவதற்கு www.onefamilylaw.ca என்ற எமது இணையத் தளத்தில் காணப்படும் "குடும்பச் சட்டம் சம்பந்தமான உங்கள் பிரச்சினைக்கு உதவி பெறும் வழி கண்டறிதல்" என்ற சிறுநூலைப் படியுங்கள்.*

**குடும்பச் சார்பு உடன்படிக்கைகள்** (Domestic Contracts) மனிதர்களிடையே நெருக்கமான உறவுகள் சம்பந்தமாகச் செய்யப்படும் சட்ட ரீதியான ஒப்பந்தங்கள் (agreements) ஆகும். கூடிவாழும் முறை ஒப்பந்தங்கள், திருமண உடனபடிக்கைகள், பிரிவு ஒப்பந்தங்கள் ஆகியன குடும்பச் சார்பு உடன்படிக்கைகளின் சில வகைகளாக உள்ளன. உங்கள் உறவுக்கு என்று குறித்த சில வரையறைகளை இவ்வாறான குடும்பச்சார்பு உடன்படிக்கைகள் மூலம் நீங்கள் அமைத்துக்கொள்ள முடியும். உங்களுக்கும் உங்கள் துணைவருக்கும் இடையேயான உறவு அறுமானால், நீங்களும் அவரும் கொண்டிருக்கும் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றி உங்களிடையே ஒரு உடன்பாட்டை ஏற்படுத்துவதற்கும் இந்தக் குடும்பச் சார்பு உடன்படிக்கையை நீங்கள் பயன்படுத்தலாம்.

குடும்பச் சார்பு உடன்படிக்கைகள் எழுத்தில் இருந்தால் ஒழிய அவை சட்ட ரீதியானவை எனக் கருத முடியாது. நீங்கள் மற்றும் உங்கள் துணைவர் ஆகிய இருவரும் இந்த உடன்படிக்கையில் சாட்சி ஒருவரின் முன்னிலையில் கையொப்பம் இடவேண்டும். இந்த உடன்படிக்கையில் அடங்கி உள்ள எதையாவது மாற்றுவது அல்லது உடன்படிக்கையை இல்லாமல் செய்வது என்றாலும் இதே விதிகளை நீங்கள் பின்பற்ற வேண்டும்: அதாவது, அதனை நீங்கள் எழுத்தில் வரைய வேண்டும். அத்துடன் நீங்கள் இருவருமே ஒரு சாட்சியின் முன்னிலையில் கையொப்பம் இட வேண்டும்.

எச்சரிக்கை: குடும்பச்சார்பு உடன்படிக்கைகள் உங்களின் முக்கியமான உரிமைகளை அழித்துவிட முடியும். இவை மூலம் உங்கள் சொத்து உரிமை மற்றும் ஆதார உதவிக்கான உரிமை ஆகியன இழக்கப்படலாம். எந்த ஒரு வகையான குடும்பச் சார்பு உடன்படிக்கையில் என்றாலும் நீங்கள் கையொப்பம் இடுவதற்கு முன்பாக சட்டத்தரணி ஒருவருடன் அதுபற்றிக் கதையுங்கள்.

## குடும்பச்சார்பு உடன்படிக்கையின் வகைகள்

### கூடிவாழும் முறை ஒப்பந்தம்

நீங்களும் உங்கள் துணைவரும் ஒன்றாக வாழுவதற்கென ஒரே வதிவிடத்துள் புகுவதற்கு முன்பாக அல்லது புகுந்த பின்பாக நீங்களும் அவரும் **கூடிவாழும் முறை ஒப்பந்தம்** (Cohabitation Agreement) ஒன்றினைத் தயாரித்துக் கொள்ளலாம்.

ஒரு கூடிவாழும் முறை ஒப்பந்தத்தில் பின்வருவனபற்றிக் கூறப்பட்டு இருக்கலாம்:

- உங்கள் உறவு நிலைக்கும் காலத்தில் சில விடயங்களை என்ன முறையில் ஒழுங்குபடுத்த விரும்புகிறீர்கள். (உதாரணமாக, நீங்கள் உங்கள் பணவிடயங்களை வெவ்வேறாக வைத்துக் கொள்வதற்கு உடன்படலாம்.)
- உங்கள் இருவரின் உறவும் முறிவடையும் என்றால் அப்போது நீங்கள் என்ன செய்வீர்கள் (உதாரணமாக, உங்கள் சொத்தினை எப்படிப் பிரிப்பது மற்றும் உங்களில் ஒருவர் மற்றவருக்கு ஆதார உதவித் தொகையாக எவ்வளவு பணம் கொடுப்பது). இது முக்கியமான ஒரு நடவடிக்கையாக இருப்பதற்குக் காரணம் என்னவெனில், சொத்து தொடர்பிலான குடும்பச் சட்டம் பொதுச் சட்டத்தின் கீழ் வாழும் வாழ்க்கைச் சோடிகளுக்கு பொருந்தத் தக்கதாக இருப்பதில்லை. பொதுச்சட்டச் சோடி ஒன்று பிரியும்பொழுது, அவர்கள் வாழ்ந்த வீட்டு உரிமைச் சாசனத்தில் குறிப்பிட்டுள்ள நபருக்கு மட்டுமே அந்தவீடு சொந்தமாகும்.

கூடிவாழும் முறை ஒப்பந்தம் ஒன்றில் உங்கள் பிள்ளைகளுக்கான கட்டுக்காப்பு மற்றும் அணுகல் உரிமை என்பவை பற்றி எதையும் கூறமுடிவதில்லை. கட்டுக்காப்பு, அணுகல் உரிமை, மற்றும் பிள்ளை ஆதார உதவித் தொகை என்பன பற்றி நீங்களும் உங்கள் துணைவரும் பிரிந்த பின்பு மட்டுமே தீர்மானிக்க முடியும்.

நீங்களும் உங்கள் துணைவரும் ஒன்றாகக் கூடி வாழ்ந்த பின்னர் திருமணம் செய்து கொண்டீர்கள் என்றால், உங்கள் கூடிவாழும் முறை ஒப்பந்தம் திருமண உடன்படிக்கையாக மாறுகிறது.

## திருமண உடன்படிக்கை

ஒரு **திருமண உடன்படிக்கை** (marriage contract) என்பது கூடிவாழும் முறை ஒப்பந்தம் போன்ற ஒன்றுதான். ஆனால், இது திருமணம் செய்து கொண்ட சோடிகளுக்கு மட்டுமே பொருந்தும். இனிமேல் திருமணம் செய்வதற்குத் திட்டமிடும் சோடிகளுக்கென இவ்வாறான உடன்படிக்கை தயாரிக்கப்பட்டால் அதனைத் **திருமணத்தின் முன்னான ஒப்பந்தம்** (pre-nuptial agreement) என்று அழைக்க முடியும்.

திருமண உடன்படிக்கைகள் என்பவை கூடிவாழும் முறை உடன்படிக்கைகள் போல அதேவகையான விடயங்கள் பற்றியே விபரிக்கின்றன. ஒரு திருமண உடன்படிக்கையில் கட்டுக்காப்பு, அணுகல் உரிமை அல்லது பிள்ளை ஆதார உதவித் தொகை என்பவை பற்றி எதுவுமே கூறப்படுவதில்லை. இவ்வாறான விடயங்கள் பற்றிச் சம்பந்தப்பட்டவர்கள் பிரிந்த பின்னரே தீர்மானிக்க முடியும்.

*குடும்பச் சொத்தும் திருமண உடன்படிக்கைகளும்*

உங்கள் துணைவரை நீங்கள் திருமணம் செய்து கொண்டவராக இருந்தால், நீங்கள் வாழ்ந்து வரும் வீடு உட்பட உள்ள உங்கள் குடும்பச் சொத்தின் பெறுமதியில் பங்கு கொள்ளும் உரிமை உங்களுக்கு உண்டு. நீங்கள் வாழும் வீடு **மணவாழ்க்கை வீடு** (matrimonial home) என்று அழைக்கப்படுகிறது.

இதுபற்றி நீங்கள் மிகக் கவனமாக இருக்க வேண்டும். உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கக் கூடிய முறையில் நீங்கள் சிலவற்றை இழந்துவிடக்கூடும்.

உங்கள் குடும்ப வீட்டில் வாழுவதற்கு நீங்களும் உங்கள் துணைவரும் சம உரிமையைக் கொண்டு இருப்பதாகச் சட்டம் சொல்லுகிறது. உங்களில் ஒருவர் மற்றவரின் அனுமதியைப் பெற்றெடுக்காமல் உங்கள் வீட்டினை விற்கவோ ஈடுவைக்கவோ முடியாது என்று சட்டம் கூறுகிறது. திருமண உடன்படிக்கைகள் இவ்வித உரிமைகளை மாற்ற முடியாது.

உங்கள் குடும்ப வீடு சம்பந்தப்பட்ட ஒரு முக்கிய உரிமையைச் சுற்றி வந்து தவிர்ப்பதற்குத் திருமண உடன்படிக்கையை மற்றவர் பயன்படுத்த முடியும். நீங்களும் உங்கள் துணைவரும் குடும்ப வீட்டின் பெறுமதியில் தனித்தனி இருவரும் அரைவாசிப் பங்குக்கு உரிமை உரிமையுடையவர்கள் என்று சட்டம் சொல்லுகிறது. நீங்கள் பிரிந்து செல்லும்பொழுது உங்கள் இருவருக்கும் உள்ள சொத்துடைமைகள் மற்றும் கடன்கள் என்பவற்றுடன் சேர்த்து உங்கள் வீட்டின் பெறுமதியும் இருவருக்கும் இடையே பங்கிடப்படுகிறது. வீடு உங்களில் யாருக்குச் சொந்தமாக இருந்தாலும், அதனை வாங்குவதற்கு யார் பணம் கொடுத்து இருந்தாலும் இது உண்மையாகக் கருதப்படுகிறது. நீங்கள் திருமணம் செய்வதற்கு முன்பாக வீடு உங்களில் ஒருவருக்குச் சொந்தமாக இருந்த போதிலும் இது உண்மையாக அமைகிறது. உங்கள் வீட்டின் பெறுமதி அல்லது வேறு ஏதாவது சொத்து பங்கிடப்பட மாட்டாது என்றோ, அல்லது பங்கிடப்பட்டாலும் உங்கள் பங்கு அது இருக்கவேண்டிய தொகையிலும் குறைவாகவே இருக்கும் என்றோ கூறுகின்ற ஒரு திருமண உடன்படிக்கையில் கையொப்பம் இடும்படி உங்கள் துணைவர் உங்களைக் கேட்கக் கூடும். திருமண உடன்படிக்கைகளில் இவ்வாறு கூறப்படுவதைச் சட்டம் அனுமதிக்கின்றது.

## பிரிவு ஒப்பந்தம்

**பிரிவு ஒப்பந்தம்** (separation agreement) குடும்பச்சார்பு உடன்படிக்கைகளில் இன்னுமொரு வகையாக அமைந்து உள்ளது. நீங்களும் உங்கள் துணைவரும் பிரிந்து வெவ்வேறாகப் போகும் பொழுது விடயங்களை எம்முறையில் கையாளுவது என்று தீர்மானிப்பதற்கு நீங்கள் ஒரு பிரிவு ஒப்பந்தத்தைப் பயன்படுத்தலாம். நீங்கள் திருமணம் செய்திருந்தால் அல்லது பொது சட்டத்தின் கீழான உறவில் வாழ்ந்து வந்தால் பிரிவு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள முடியும். ஒரு பிரிவு ஒப்பந்தத்தில் பிள்ளைகளின் கட்டுக்காப்பு மற்றும் அணுகல் உரிமை, பொருளாதார ஆதரவு, சொத்தினை எவ்விதம் பிரிப்பது போன்ற விடயங்களைப் பற்றி கூறமுடியும்.

நீங்களும் உங்கள் துணைவரும் இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பிரிவு ஒப்பந்தம் ஒன்றினை உபயோகிக்கலாம். அதற்குக் காரணங்கள்:

- ஒப்பந்தம் ஒன்றைப் பேரம்பேசி நிறுவுவது நீதிமன்றம் போய் வாதாடுவதை விட விரைவானது ஆகவும் குறைந்த மனஅழுத்தம் தருவதாகவும் இருக்கலாம்.
- உங்களது ஒப்பந்தத்தில் அடங்கி இருப்பதை நீங்கள் கட்டுப்படுத்த முடியும்.
- நீங்களும் உங்கள் துணைவரும் மனம் விரும்பி ஒப்பந்தத்தில் இருப்பவற்றை வரைந்த காரணத்தால், நீங்கள் ஒப்பந்தத்தைப் பின்பற்றி நடக்கும் சாத்தியம் அதிகமாக இருக்கலாம்.

## குடும்பச் சார்பு உடன்படிக்கைகள் எவ்வாறு நிறைவேற்றப் படுகின்றன?

நீங்கள் உங்களின் குடும்பச் சார்பு உடன்படிக்கையை ஒரு நீதிமன்றத்தில் பதிவு செய்ய முடியும். அப்படி நீங்கள் செய்தால், அது ஒரு நீதிமன்ற உத்தரவு போன்று கருதப்பட்டு அதில் உள்ள துணை வாசகங்கள் யாவும் நிறைவேற்றப்படும். எதிர்காலத்தில் பிரச்சினை ஏதும் எழுந்தால் உதவியாக இருப்பதற்காக நீங்கள் உங்கள் உடன்படிக்கையைப் பதிவு செய்ய வேண்டும். நீதிமன்றத்தில் உங்கள் குடும்பச் சார்பு உடன்படிக்கையைப் பதிவு செய்தால் அந்த ஒப்பந்தத்தை நீதிமன்றம் மீளாய்வு செய்யும் என்று அர்த்தமில்லை. உங்களில் ஒருவர் அந்த உடன்படிக்கையை எதிர்த்தால் மட்டுமே நீதிமன்றம் உங்கள் ஒப்பந்தத்தை மீளாய்வு செய்யும். ஒப்பந்தத்தில் உள்ள மற்றைய நிபந்தனைகளை நிறைவேற்ற உதவும்படியும் நீங்கள் நீதிமன்றத்தைக் கேட்டுக்கொள்ள முடியும்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில், குடும்பச் சார்பு உடன்படிக்கை ஒன்றில் அடங்கி உள்ளவற்றை நீதிமன்றம் நிறைவேற்றும். குடும்பசார்பு உடன்படிக்கை ஒன்றில் கையொப்பம் இடுவதற்கு முன்பாக சட்ட ஆலோசனை பெறுங்கள். ஒப்பந்தத்தில் அடங்கி உள்ள விடயங்களை நீங்கள் புரிந்து கொள்ளுவதை உறுதி செய்து கொள்ளுங்கள். ஒப்பந்தத்தில் உங்களுக்கு இருக்கும் உரிமைகள் சட்டத்தின் கீழ் உள்ள உங்கள் உரிமைகளில் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றன என்பதை நீங்கள் நன்கு புரிந்து கொள்வதை உறுதி செய்து கொள்ளுங்கள். இதில் சம்பந்தப்பட்ட ஒப்பந்தம் உங்களுக்குச் சரியாகப் பொருந்துகிறதா என்று தீர்மானிப்பதற்கு உங்களுக்குத் தேவைப்படுகின்ற உங்கள் துணைவரின் நிதிநிலைமை பற்றிய தகவல் யாவும் உங்களிடம் உண்டா என்று கண்டறிய ஒரு சட்டத்தரணி உதவ முடியும்.

## நியாயமில்லாத உடன்படிக்கை ஒன்றினை நீதிமன்றம் மாற்றக் கூடுமா?

உங்கள் குடும்பச் சார்பு உடன்படிக்கையில் அடங்கியுள்ள ஒரு விடயத்தை நீங்கள் எதிர்க்க விரும்பினால் அதுபற்றி நீங்கள் நீதிமன்றத்திடம் விண்ணப்பிக்க வேண்டும். இவ்வாறான ஒப்பந்தங்களில் தலையிடுவதற்கு நீதிமன்றம் விரும்புவதில்லை என்பதை நீங்கள் அறியவேண்டும். குடும்பச் சட்டத்தின்கீழ் உங்களுக்குக் கிடைப்பதைவிட குறைவானவற்றை ஒரு உடன்படிக்கை உங்களுக்குத் தருகிறது என்ற ஒரு காரணத்துக்காக நீதிமன்றம் அந்த உடன்படிக்கையை மாற்றப்போவதில்லை. ஒப்பந்தம் ஒன்றினை நீங்கள் எதிர்த்து வெற்றிகாணும் சாத்தியம் பின்வரும் சூழ்நிலைகளில் அதிகமாக இருக்கும்:

- உங்கள் துணைவர் தனது பொருளாதார நிலைமை பற்றி நேர்மையான முறையில் கூறவில்லை
- ஒப்பந்தத்தில் கையொப்பம் இடும்படி உங்கள் மீது நிர்ப்பந்தம் தரப்பட்டது
- ஒப்பந்தம் மிகவும் அநீதியான ஒன்றாய் அமைந்துள்ளது

சொத்தினைப் பிரிப்பது பற்றி உடன்படிக்கைகளில் சொல்லி உள்ளதை நீதிமன்றம் வழக்கமாக மாற்றுவதில்லை. ஆனால் வாழ்க்கைத் துணையின் ஆதார உதவித் தொகை பற்றி உடன்படிக்கையில் கூறப்பட்டு உள்ளதை நீதிமன்றம் மாற்றும் சாத்தியம் சற்று அதிகமாக உண்டு. உடன்படிக்கையில் கையொப்பம் இட்ட சமயம் இருந்த நிலைமையை விட உங்கள் நிலைமை இப்பொழுது தாழ்ந்து இருந்தால், ஒப்பந்தத்தை நீதிமன்றம் மாற்றுகின்ற சாத்தியம் கூடுதலாக அமையும்.

குடும்பச் சார்பு உடன்படிக்கை ஒன்றுக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்படும் பொழுது உடன்படிக்கையின் ஒரு பகுதியை அகற்றிவிட வேண்டும் என்று நீதிமன்றம் தீர்மானிக்கலாம். குறிப்பிட்ட அந்தப் பகுதி உடன்படிக்கையின் ஒரு பிரதான பகுதியாக அமையுமானால், முழு ஒப்பந்தமுமே சட்ட ரீதியில் ஏற்கமுடியாத ஒன்று என நீதிமன்றம் தீர்மானிக்கலாம். அப்படியான ஒரு நிலைமையில் நீங்களும் உங்கள் துணைவரும் புதிய ஒரு ஒப்பந்தத்தைத் தயாரிக்கலாம், அல்லது அதுபற்றி உங்களிடையே இணக்கம் இல்லையென்றால், இவ்விடயங்கள் பற்றித் தீர்மானிப்பதற்கு உதவும்படி நீதிமன்றத்தை நீங்கள் கேட்க முடியும்.

*நீங்கள் பிரெஞ்சு மொழி பேசும் ஒரு பெண்ணாக ஒன்ராறியோவில் வாழ்ந்து வருகிறீர்கள் என்றால் குடும்பச் சட்ட நீதிமன்ற நடைமுறைகளின் பொழுது பிரெஞ்சு மொழியில் சேவைகளைப் பெறுகின்ற உரிமை உங்களுக்கு உண்டு. உங்கள் உரிமைகள் பற்றி நீங்கள் மேலதிக தகவல் பெறுவதற்கு ஒரு சட்டத்தரணி அல்லது ஒரு சமூக சட்ட உதவி நிலையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்: அல்லது பெமெயிட் (Femaide) என்று அழைக்கப்படும் ஆதாரத் தொலைபேசி இணைப்புடன் 1-877-336-2433 என்ற எண்ணிலும், செவிப்புலன் குறைந்தவர்கள் அதன் 1-866-860-7082 என்ற எண்ணிலும், தொடர்பு கொள்ளலாம். பிரெஞ்சு மொழியில் சேவைகள் பெறுவது எப்படி என்பது பற்றிய மேலதிக தகவலினை www.onefamilylaw.ca அல்லது www.undroitdefamille.ca. என்ற எங்கள் இணையத்தளத்திலும் நீங்கள் பார்க்க முடியும்.*

## பெறக்கூடியதாக உள்ள குடும்பச் சட்ட விடயங்களின் தலைப்புகள்*

1. மாற்றுமுறைச் சர்ச்சைத் தீர்வும் குடும்பச் சட்டமும் (TML 001)
2. பிள்ளைப் பாதுகாப்பும் குடும்பச் சட்டமும் (TML 002)
3. பிள்ளை ஆதார உதவித் தொகை (TML 003)
4. குற்றவியல் மற்றும் குடும்பச் சட்டம் (TML 004)
5. பிள்ளைக்கான கட்டுக்காப்பும் அணுகல் உரிமையும் (TML 005)
6. **குடும்பச் சார்பு உடன்படிக்கைகள் (TML 006)**
7. குடும்பச் சட்டச் சமரசம (TML 007)
8. குடிவரவாளர்களாக, அகதிகளாக, மற்றும் குடிவரவு அந்தஸ்து இல்லாதவர்களாக உள்ள பெண்கள் சம்பந்தப்பட்ட குடும்பச் சட்டப் பிரச்சினைகள் (TML 008)
9. குடும்பச் சட்டம் சம்பந்தமான உங்கள் பிரச்சினைக்கு உதவி பெறும் வழி கண்டறிதல் (TML 009)
10. குடும்பச் சட்டத்தில் சொத்து எவ்வாறு பிரிக்கப்படுகிறது (TML 010)
11. திருமணமும் விவாகரத்தும் (TML 011)
12. வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித் தொகை (TML 012)

* *இந்த சிறுநூல் பல வடிவங்களிலும் பல மொழிகளிலும் கிடைக்கக் கூடியதாக உள்ளது. இது பற்றி மேலதிக தகவல் பெறுவதற்கு www.onefamilylaw.ca என்ற இணையத் தளத்தைப் பாருங்கள். உங்கள் குடும்பச் சட்ட உரிமைகளை நீங்கள் புரிந்து கொள்வதற்கு உதவும் வகையில் இந்த இணையத் தளத்திலும் மேலதிக விடயங்களை நீங்கள் காண முடியும்.*


flew Family Law Education for Women
Women's Right to Know

fodf Femmes ontariennes et droit de la famille
Le droit de savoir

Funded by: / Financé par :
Ontario

இவ் வெளியீடுகளில் தெரிவிக்கப்பட்டு இருக்கும் கருத்துக்கள் பெண்களுக்கான குடும்பச் சட்டக் கல்வி (FLEW) அமைப்பின் கருத்துக்களேயன்றி அவை மாகாண அரசின் கருத்துக்களைப் பிரதிபலிக்கின்றன எனக் கருத முடியாது.